UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS
RECEIVED
1980-7-28
PERIODICALS DIVISION
LIBRARY

பக்கங்கள் 8 ★

ஈழநாடு
The EELANAADU
50 சதம்

மலர் 22 | ஆடி 13 | தமிழ் ஆண் 15 | இதழ் 168
யாழ்ப்பாணம் | திங்கட்கிழமை | 28-7-80

## இன்று முதல் 3 தினங்கள் நடமாடும் செயலகம்

[முல்லைத்தீவு] பிரதமரின் கீழ் இயங்கும் உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சின் நடமாடும் செயலகம் இன்று திங்கட்கிழமை முதல் புதன் கிழமைவரை மூன்று நாட்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெறவுள்ளது.

திங்கள், செவ்வாய் ஆகிய தினங்களில் காலை முதல் மாலைவரை முல்லைத்தீவு பட்டினசபை மண்டபத்திலும் புதன்கிழமை காலை முதல் நண்பகல் வரை வவுனிக்குளம் கொல்லன்விளாங்குளம் தமிழ் கலவன் பாடசாலையிலும் நடமாடும் செயலகம் செயற்படும்.

திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றின் உயர் அதிகாரிகள் பலர் இந்த நடமாடும் செயலகத்தில் பங்குபற்றுவார்கள். (அ. -இ)

# ஈரானிய ஷா காலமானார்!

## இறுதிச் சடங்கில் கார்ட்டர் கலந்து கொள்வார்?

### அமெ பணயக்கைதிகள் விடுவிக்கப்படார்

கெய்ரோ, ஜூலை 27

ஈரான்—அமெரிக்க நெருக்கடிக்கு மூலகர்த்தாவும், சர்ச்சைக்குரிய அரசியல் பிரமுகருமாகத் திகழ்ந்த முன்னாள் ஈரானிய மன்னர் ஷா இன்று கெய்ரோவிலுள்ள உள்ளூர் ராணுவ ஆஸ்பத்திரியொன்றில் காலமானார்.

புற்றுநோயினாலும் வேறு பல நோயினாலும் பீடிக்கப்பட்டிருந்த ஷாவுக்கு புற்றுநோய்க் கட்டி ஒன்று வெடித்ததாலேயே மரணம் ஏற்பட்டது என்று அவருக்கு சிகிச்சை அளித்துவந்த டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

அறுபது வயதான ஷாவின் மரணச்செய்தியை உத்தியோகபூர்வ மத்திய கிழக்கு செய்தி ஸ்தாபனம் முதலில் அறிவித்தது. பின்னர் எகிப்திய அதிபர் அலுவலகம் அச்செய்தியை ஊர்ஜிதம் செய்தது.

### ஈரானை விட்டு வெளியேறினர்

முப்பத்தேழு ஆண்டுகளாக ஈரானில் ஆட்சி செலுத்திவந்த ஷாவுக்கு ஈரானில் பரவலாக எதிர்ப்பு இருந்ததால் கடந்த ஆண்டு நாட்டைவிட்டு வெளியேறி பஹாமாவில் தஞ்சம் புகுந்தார். பஹாமாவில் ஏற்பட்ட உள்ளூர்க்கலவரத்தைத் தொடர்ந்து அங்கிருந்து வெளியேறிவர் அமெரிக்கா போய்ச்சேர்ந்தார். அமெரிக்காவில் இருக்கும்போது புற்றுநோயால் பாதிக்கப்பட்ட இவர் அங்கு சிகிச்சைபெற்றுவந்தார். ஈரானில் ஆட்சி செலுத்தியபோது இவர் இழைத்ததாகக் கூறப்படும் அநீதிகள் தொடர்பாக விசாரணை செய்வதற்காக ஷாவை திருப்பி அனுப்புமாறு கோரிய ஈரானிய மாணவர்கள் ஈரானிலிருந்த அமெரிக்க தூதரக அதிகாரிகளை பணயம்வைத்தனர். ஈரானிய மாணவர்களின் கோரிக்கையை அமெரிக்கா ஏற்கமறுத்ததைத்தொடர்ந்த இருநாடுகளுக்குமிடையில் நெருக்கடி வலுப்பெற்றது.

### பஹாமாவிலிருந்து எகிப்துக்கு

இதனையடுத்து அங்கிருந்து வெளியேறிய ஷா மீண்டும் பஹாமா போய்ச் சேர்ந்தார். அங்கு அவருக்கு எதிராக கிளர்ச்சிசெய்யப்பட்டதைத் தொடர்ந்து மீண்டும் வெளியேறி எகிப்து போய்ச் சேர்ந்தார்.

எகிப்தில் தங்கியிருந்தபோது புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வெளியேறியவர் சிலகாலத்திற்குப்பின்னர் மீண்டும் நோயுற்று ராணுவ வைத்தியசாலையொன்றில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

### நல்லடக்கத்துக்கு ஏற்கனவே கல்லறை தயார்

எகிப்திய அரச குடும்பத்தினரை அடக்கம்செய்யும் இடத்தில் ஷாவின் பூதவுடல் அடக்கம் செய்யப்படவுள்ளது. இவரது பூதவுடல் அடக்கம்செய்வதற்கென கல்லறை ஒன்று ஏற்கனவே தயாராக உள்ளது.

ஷா இறக்கும்போது எகிப்திய அதிபர் அன்வர் சதாத், அலெக்ஷாண்டிரியாவில் இருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. மரணச்சடங்குகள் பற்றி இச் செய்தி அச்சுக்குப் போகும்வரை அறிவிக்கப்படவில்லையாயினும் இச் சடங்குகளில் அமெரிக்க அதிபர் ஜிம்மிகார்ட்டர் உட்பட பலநாட்டுத் தலைவர்கள் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### பணயக்கைதிகள் விடுவிக்கப்படார்

முன்னாள் ஈரானிய மன்னர் ஷா காலமானபோதும் ஈரானிய தீவிரவாத மாணவர்களால் பணயம் வைக்கப்பட்டுள்ள 52 அமெரிக்க பணயக்கைதிகளும் விடுவிக்கப்பட மாட்டார்களென தெஹ்ரானில் ஈரானிய அரசாங்க அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். [ஏ]

## பிரதமர் 'பிரேமா' நாளை முல்லைத்தீவுக்கு விஜயம்

[முல்லைத்தீவு] பிரதமரும் உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சருமான திரு. ஆர். பிரேமதாச நாளை செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளுகிறார்.

பிரதமராகப் பதவியேற்ற பின்னர் திரு. பிரேமதாச வடபகுதிக்கு விஜயம்செய்வது இதுவே முதற்தடவையாகும்.

நாளை காலை விசேட ஹெலிகொப்டர் விமானமூலம் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மைதானத்தில் வந்திறங்கும் பிரதமரை முல்லைத்தீவு மாவட்ட அமைச்சர் ஜனாப் ஏ. ஆர். எம். மன்சூர், அரசாங்க அதிபர் திரு. கோசின் ஜெயவர்த்தனா ஆகியோர் வரவேற்பார்கள்.

பிரதமருடன் பிரதி உள்ளூராட்சி வீடமைப்பு அமைச்சர் இம்புலானவும் வருகிறார்.

அங்கிருந்து முள்ளியவளை உப அஞ்சலகம்வரை பிரதமர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவார். பிரதமர் உப அஞ்சலகம் அஞ்சலகமாக தரமுயர்த்தி வைக்கப்படும் விழாவில் கலந்துகொள்வார். காலை 10-30 மணிக்கு வற்றாப்பளை அம்மன் ஆலயத்திற்குச் சென்று அங்கு நடைபெறும் விசேட பூசையில் கலந்துகொள்ளுவார். அங்கிருந்து முல்லைத்தீவுக் கச்சேரியில் நடைபெறும் அபிவிருத்தி சம்பந்தமான மகாநாட்டில் பிரதமர் கலந்துகொள்ளுவார். மாலை 3 மணிக்கு முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் பிரதமர் உரையாற்றுவார். [சொ-நு]

## அமரர் துரையப்பாவின் சமாதிக்கு மக்கள் அஞ்சலி

[யாழ்ப்பாணம்] முன்னாள் யாழ்ப்பாணம் எம். பி யும் யாழ் மாநகர பிதாவுமான அமரர் துரையப்பாவின் நினைவுதினம் நேற்றுக் காலை யாழ் நகரில் அமைதியானமுறையில் நடைபெற்றது.

துரையப்பா ஞாபகார்த்தக் குழுவால் கொண்டாடப்பட்ட இந்நினைவு தின விழாவையொட்டி யாழ் மாநகரசபை முன்றலில் இருந்து, துரையப்பா விளையாட்டரங்குவரை வீதியின் இருமருங்கும் வாழைகளாலும் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

துரையப்பா ஞாபகார்த்தக் குழுவின் தலைவர் திரு. எஸ். பேரின்பநாயகம், திரு. ஏ. ஜி. இராஜசூரியர், ஜனாப் பசீர் ஆகியோர் தலைமையில் நூற்றுக்கு அதிகமானவர்கள் யாழ் மாநகர முன்றலில் இருந்து துரையப்பா விளையாட்டரங்குவரை மௌன ஊர்வலமாகச் சென்று அங்குள்ள அமரர் துரையப்பாவின் சமாதிக்கு மலர் அஞ்சலி செலுத்தியும் மலர் வளையங்களை வைத்தும் அஞ்சலி செலுத்தினர்.

துரையப்பாவின் ஒரே மகளான செல்வி ஈசா துரையப்பாவும் அவரது குடும்பத்தினரும் அமரரின் சமாதிக்கு அஞ்சலி செலுத்தினர். சமாதியில் இருந்து மக்கள் மீண்டும் ஊர்வலமாக யாழ் மாநகரசபை மண்டபத்திற்கு சென்றனர்.

திரு. பேரின்பநாயகம் செல்வி ஈசா துரையப்பா ஜனாப் பசீர் ஆகியோர் அமரர் துரையப்பாவின் உருவப்படத்துக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். [கொ-கு]

## கல்வி அமைச்சு நிர்வாகம் பரவலாக்கப்பட்டது

### மாணிக்கவாசகருக்கு உயர் பதவி

[கொழும்பு] கல்வியமைச்சின் நிர்வாகம் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு பரவலாக்கப்பட்டுள்ளது.

திட்டமிடலும் ஆசிரிய கல்வியும் ஒரு பிரிவாகவும் பாடசாலை அலுவல்களும் விசேஷ கல்வியும் ஒருபிரிவாகவும் பிராந்திய மேற்பார்வையும் முகாமைத்துவ அபிவிருத்தியும் மற்றய பிரிவாகவும் பரீட்சைகளும் நிதியும் நான்காவது பிரிவாகவும் பிரிக்கப்பட்டுள்ளது.

பிராந்திய மேற்பார்வை முகாமைத்துவ அபிவிருத்தியும் என்ற பிரிவுக்கு பொறுப்பாக ஐவர் நியமிக்கப்பட்டுள்ளனர் இப்பிரிவின் யாழ்ப்பாணம் முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், சிலாபம், புத்தளம் ஆகிய பகுதிகளுக்கு முன்னாள் வடமாநில வித்தியாதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இப்பதவியை அவர் இம்மாதம் 1-ம் திகதி பொறுப்...

[8-ம் பக்கம் பார்க்க]

## இயக்குநர் குழுத் தேர்தல்: 7 இடங்களையும் கூட்டணி கைப்பற்றியது!

[மட்டக்களப்பு] கற்குடாத்தொகுதி வாகரை பலநோக்குக் கூட்டுறவுச்சங்க இயக்குநர் தேர்தல் அண்மையில் பரபரப்பான முறையில் பொலிஸ்பாதுகாப்புடன் நடைபெற்றது.

இத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிட்ட ஏழுபேரும் 35 [illegible] மீது 49 வாக்குகளும், ஐக்கிய தேசிய கட்சிசார்பில் போட்டியிட்டவர்கள் 14 வாக்குகளையும் பெற்றனர்.

வெற்றிபெற்றவர்கள் விபரம் தலைவர் திரு கே. அருள்பிரகாசம், உ தலைவர் திரு. ஏ. அரசப்பு, மற்றும் திருவாளர்கள் கே போகநாதன், கே. வீரன், எஸ். தியாகராசா, எஸ் சித்திரவேல், எஸ். ஜீவரெத்னம் ஆகியோர் தெரிவானார்கள்.

[8-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவூதிஅரேபியாவில் இடி அமின்

லண்டன், ஜூலை 27

உகண்டாவின் முன்னாள் ஜனாதிபதி ஜெனரல் இடி அமீன் சவூதி அரேபியாவில் அகதியாக இருக்கிறார் பிரிட்டிஷ் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

ஹோட்டல் ஒன்றில் தங்கியிருக்கும் இடி அமீன் அகதியாக அல்ல, சவூதி அரேபியாவின் உள்ள சமயஸ் தலங்களைத் தரிசிக்கவே அங்கு இருக்கிறார் என சவூதி அரேபியா தெரிவித்திருக்கிறது (ஐ)

## இந்தியா மாஸ்கோவை வென்றது

மாஸ்கோ, ஜூலை 27

ஒலிம்பிக் ஹொக்கி சுற்றுப் போட்டியில் இந்தியா சோவியத் யூனியனை 4—2 கோல்களால் வெற்றியீட்டி இறுதி ஆட்டத்திற்கு தகுதிபெற்றுள்ளது.

7 தடவைகள் ஒலிம்பிக்கின் அணிகளைச் சுவீகரித்துள்ள இந்தியா இம்முறை இறுதி ஆட்டத்தில் ஸ்பெயினை எதிர்த்து ஆடும்.

இம்மாதம் 29ம் திகதி செவ்வாய்க்கிழமை இறுதி ஆட்டம் நடைபெறும். (ஐ)

## 55 வது வருடாந்தப் பொதுக் கூட்டம்

[பண்டத்தரிப்பு]

அரசாங்க இளைப்பாறிய வைத்திய உத்தியோகத்தர்கள் சங்கத்தின் 55வது வருடாந்த பொதுக்கூட்டம் ஆகஸ்ட் மாதம் 10ந் திகதி கொழும்பு வைத்தியக் கல்லூரி சொற்பொழிவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. [ப]

[ஒலிம்பிக் செய்திகள்]

விளையாட்டு

## சமாதானத்தின் தூதுவன்: ஒலிம்பிக் கண்காட்சி

மாஸ்கோ, ஜூலை 27

"விளையாட்டு சமாதானத்தின் தூதுவன்" என்ற பெயரில் ஒலிம்பிக் 80-ன் பிரதான கண்காட்சியொன்று மாஸ்கோவில் ஆரம்பமானது.

விளையாட்டுக்களுடன் சம்பந்தப்பட்ட சோவியத் கலைஞர்கள் உருவாக்கிய மிகச் சிறந்த 1,100 பொருட்கள் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

ஐரோப்பாவிலேயே மிகப் பெரிய மண்டபங்களில் ஒன்றான மத்திய கண்காட்சி மண்டபத்தில் நடைபெறும் இக்கண்காட்சியில் 609 ஓவியர்களது ஓவியக் கலைப்படைப்புக்களும் வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் சுவரொட்டிகளையும், புகைப்படங்களையும் குறிப்பிடலாம்.

கலாரசிகர்கள், விளையாட்டு அபிமானிகள் மத்தியில் இக்கண்காட்சி பேரார்வத்தைத் தூண்டிவிட்டுள்ளது.

சோவியத் யூனியனில் 15 குடியரசுகளையும் சேர்ந்த கலைஞர்கள் இக்கண்காட்சியில் பங்குபற்றியுள்ளனர். இவர்களது கருத்துக்கள் பாரம்பரிய தேசிய விளையாட்டுக்களது வளர்ச்சியையும் சோவியத் மக்களது வாழ்க்கையில் விளையாட்டுக்களும் உடற்பயிற்சிகளும் பிரிக்கமுடியாத ஒரு பகுதியாக மாறிவிட்டன என்பதையும் காட்டுகின்றன.

ஒலிம்பிக் விளையாட்டுக்கள் முடியும்வரை இக்கண்காட்சி நடைபெறும்.

### 13 லட்சம் டிக்கட்டுகள் விற்பனை

ஒலிம்பிக் விளையாட்டுக்களின்போது நடைபெறும் பல்வேறு போட்டிகளுக்கான 13 லட்சம் டிக்கட்டுகள் விற்பனையாகியுள்ளன.

ஃ ஃ ஃ

### முஸ்லிம் வீரர்கள் நோன்பு

கடந்த இருவாரங்களாக ஒலிம்பிக் கிராமத்தில் உள்ள முஸ்லிம்கள் தங்கள் மதவழிபாடுகளை ஒழுங்காக நிறைவேற்றி வருகிறார்கள் முதலில் இங்கு சிறிய குழுவினரும் அடுத்து லிபியா குழுவினரும் வந்தனர்.

ஃ ஃ ஃ

### ஒலிம்பிக் தலைவரின் முத்திரைகள்

சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் புதிய தலைவரும் சோவியத் யூனியனிலுள்ள ஸ்பெயின் தூதருமான ஜுவான் அந்தோனியோ சமரானச் சேகரி

(5-ம் பக்கம் பார்க்க)

## உலக சமாதானத்தை வலுப்படுத்தும் சாதனம்

யாஸிர் அரபாத மகிழ்ச்சி

மாஸ்கோ ஜூலை 27

உலக சமாதானத்தை வலுப்படுத்துவதிலும் நாடுகளுக்கு இடையில் நட்புறவை ஏற்படுத்துவதிலும் ஒரு சாதனமாகத் திகழும் ஒலிம்பிக் இம்முறையும் வெற்றிகரமாக மாஸ்கோவில் நடைபெறுவது மகிழ்ச்சிக்குரியதே.

இவ்வாறு பலஸ்தீன விடுதலை ... மாஸ்கோ ஒலிம்பிக் விழாவிற்கு வந்திருக்கும் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் திரு. யாஸிர் அரபாத் நிருபரிடம் தெரிவித்தார்.

"ஒலிம்பிக் ஆரம்ப விழாவில் கலந்துகொள்ள எனக்கு அழைப்பு கிடைத்த விளையாட்டுக்களின் நிகழ்ச்சிகளுக்கு நான் ... சில ... ஒலிம்பிக் நடைபெறுவதால் ... ஒரு ... நிகழ்வாக ... ஒலிம்பிக் ... மறக்கமுடியாததுபோய்விட்டது.

61 நாடுகள் இந்த விளையாட்டுக்களில் ... ஒரு ... வெற்றியாகும். மாஸ்கோ இளைஞர்களையும் பல ... மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது என்றும் அவர் கூறினார். (ஐ)

—

## வட்டு லயன்ஸ் கழக தலைவர்

[பண்டத்தரிப்பு]

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தின் தலைவராக சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபர் திரு. கே. அருணாசலம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். [க]

—

யாழ்.

## பல்கலைக் கழகத்தில் வங்கிக் கிளை

[பண்டத்தரிப்பு]

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இலங்கை வங்கிக்கிளையொன்று விரைவில் திறக்கப்படவுள்ளது

பல்கலைக் கழக மாணவர்கள் இலகுவில் கடன் வசதிகளை பெற்றுக்கொள்ளவும், பல்கலைக் கழக நிர்வாகம் வங்கித் தொடர்புகளை சுலபமாக செய்துகொள்வதற்கும், இந்த வங்கிக்கிளை திறக்கப்படவுள்ளதாக இலங்கை வங்கி யாழ். பிரதேச முகாமையாளர் திரு. வி. கே. குணநாயகம் தெரிவித்தார். [ச]






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகத்தான 13-வது கடைசி வாரம்
**ராணி** (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
★ கமலஹாசன் (இரட்டை வேடத்தில்) ★ ஸ்ரீதேவி
**கல்யாண ராமன்** (கலர்)

**RAJAH** JAFFNA Phone: 7180
Daily 10 30, a.m. 2-30, 4-45, 7-15, & 9-45 p: m.
First it was — 'DRACULA' Then 'ZOLTAN HOUND OF DRACULA' Now From The Same Producers Another new kind of Masterpiece in Horror and Suspence.
RALPH BATES. BARBARA JEFFORD in
**LUST FOR A VAMPIRE**
(Color - very strictly for adults)
(கண்டிப்பாக வயது வந்தவர்கட்கு)

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30 9-45
சிவாஜி - விஜயா - ரஜனிகாந்த்
நடித்த
**ஜஸ்டிஸ் கோபிநாத்**
(ஈஸ்மென் கலர்)

**ஹரன்** யாழ்ப்பாணம்
தினசரி 10-30, 2-30, 6-30 9-30
3-வது ஜனத்திரள் வாரமாக
ஓடிக் கொண்டிருக்கிறது.
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி, அசோகன்
**பெரிய இடத்துப் பெண்**
புத்தம் புதிய பிரதி

**வெலிங்டன்**
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த்-படாபட்
**6-ல் இருந்து 60 வரை**

**லிடோ**
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி-சுஜாதா-ஜெயா
**ஞானக் குழந்தை**

**வின்ஸர்** 28-7-80 மட்டும்
(யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 1-30, 4-30, 7-00
பாரதிராஜாவின்
**நிறம் மாறாத பூக்கள்**
(வண்ணப்படம்) 7.80.
29-7-80 முதல்
எம். ஜி. ஆர் - சரோஜாதேவி நடித்த
**அரச கட்டளை**

**சாந்தி** (யாழ்நகர்) தினசரி 5 காட்சிகள்
9 30, 1-00, 4-00, 7-00, 9-45
காட்சிக்குக் காட்சி ஹவுஸ் புல்! ஹவுஸ் புல்!
★ கமலஹாசன் ★ ஸ்ரீபிரியா ★ மஞ்சுளா
★ லதா ★ ஸ்ரீகாந்த் ★ ஜெய்கணேஷ் ★ தீபா
★ ரவிச்சந்திரன் ★ முத்துராமன்
★ சுருளிராஜன் ★ எம். என். நம்பியார்
(போன்: 7642) - டிரிங் - டிரிங் - நீயா?
தன் காதலனைச் சுட்டுப்பொசுக்கிய ஆறு இளம் வாலிபர்களை பழிவாங்கத் துடித்த இச்சாரிப் பாம்பின் கதை
தென்னகத்தின் பல முன்னணி நட்சத்திரங்கள் ஒன்றிணையும் "வெள்ளி விழா" வண்ணச்சித்திரம்
இசை : சங்கர்-கணேஷ் டைரக்ஷன்: துரை
**நீயா?**
ஈஸ்ட்மன் கலர் - ஜெமினி
வயதுவந்தவர்களுக்கு மிக உகந்த சித்திரம்
MORE SUITED FOR ADULTS

# இன்றைய பலன்

[28-7-1980]

ஆடி மாதம் 13-ம் திகதி

[திங்கட்கிழமை]

மேடம்: இதயத்தை தொடும் சம்பவங்கள் இடம் பெறும். இலாபம் புதிய வாகனத்தால் முதலீடு செய்யும் சந்தர்ப்பமும் ஏற்படலாம்.

இடபம்: கோவிலில் அதிக பற்றுதல் ஏற்படும். இலாபநோக்குடன் காரியமாற்றுவீர்கள். இளைஞர்களின் வெளிநாட்டுக்கான இடம் உண்டு. பிள்ளைகளின் செல்வாக்கு வளரும்.

மிதுனம்: வழுவுப் பார்வை உங்களை வட்டமிடும். எதிரிகள் காத்திருப்பர். ஆயுதம் கிடைக்கும் இடம் விலகல் எதிலும் அவதானம் வேண்டும்.

கடகம்: ஆனந்த மயமான வாழ்க்கை. அன்பர்களின் வருகை உங்களை உற்சாகப்படுத்தும். கணவன் மனைவி உறவு முறைகள் மிகவும் நெருக்கமாக இருக்கும். விவாகத் திருமணமும் நடைபெறலாம்.

சிங்கம்: எண்ணிய காரியத்தில் ஏமாற்றம் ஏற்படும். அன்பர்களின் தொல்லைகள் அதிகரிக்கும். தொழில் புரியும் இடத்தில் மேலதிகாரிகளின் கண் புரிந்து நடக்க வேண்டிவரும். [illegible]

கன்னி: பாக்கிய விருத்தியுடன் பல பெரியவர்களின் அருளும் கிடைக்கும். தங்க சமயத்தில் உதவுதற்கு நண்பர் முன் வருவார். சிறப்பான தினம்.

துலாம்: தொழில்துறையில் முன்னேற்றம் தொடர்ந்து வரும். புகழ்நிலையில் அபிவிருத்தி நிம்மதி பிறக்கும்.

விருச்சிகம்: வணிகத்துறையில் முன்னேற்றம் காணப்படும். நீண்டநாள் கொடுக்கல் வாங்கல் நிவர்த்தியாகும். மக்களின் பிரயத்தனம் உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

தனு: ஏமாற்றத்தின் அறிகுறிகள் காணப்படுகின்றன. கொடுக்கல் வாங்கல் விஷயத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும். பெரியார் ஒருவருடன் கருத்து வேற்றுமை உருவாகலாம். நாவடக்கம் தேவை.

மகரம்: சிறப்பிடம் பெறக் கூடிய அதிக ஆத்திரம் தேவையில்லை. வீணான சந்தேகங்களும் தோன்றக்கூடும். உங்களைச் சிக்கலைப்படுத்தக் கூடிய சூழ்நிலை விரிக்கப்படும். சிந்தித்துப் பின்பு செயலாற்றவும்.

கும்பம்: சொத்திலம்பமாகும் அதன் மூலம் மற்றவர்களைச் சொந்தமாக்குவீர்கள். இவர் தேர்தல் விவகாரங்களில் ஈடுபடலாம். குடும்பத்தில் அமைதி நிலவும். பெரியவர்களுடன் உறவுகள் பலப்படும்.

மீனம்: சகோதர வழியால் பணம் கிடைக்கும். தொல்லைகள் தீரும். உங்கள் வீட்டிலேயே பூரண நிம்மதி ஏற்படும் இது.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## பிஸ்கால் ஏல விற்பனவு விளம்பரம்

மாவட்ட மன்று மல்லாகம்

வழ இல. 3333 M S

அருளம்பலம் பொன்னுத்துரை,
மாவிட்டபுரம், காங்கேசன் துறை.

வழக்காளி

எதிராக

பொன்னுத்துரை கைலேயன் கல்பூபதி,
வீமன்காமம், தெல்லிப்பழை.

மல்லாகம் மாவட்ட நீதிமன்ற வழ. இல. M S 3333ல் எனக்கு கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்ட ஆதனத்தை 1980-ம் ஆண்டு ஆவணி மாதம் 27-ந் திகதி பிற்பகல் 1 மணி தொடக்கம் அந்தக் காணியில் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

ரூபா 11,300 மேலும் செலவும் ரூபா 637-72; மேலும் ரூபா 10,000-00, 26-10 79ந் தொடக்கம் 18-1-80 வரை 24% வீத வட்டியும் அதன் பின் தீர்வைத்தொகை அது முழுவதும் இறுபடும் வரை 5% வீத வட்டியும்.

### ஆதனவிபரம்

வடமராட்சி யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பழை கோவிற்பற்று வீமன்காமம் இறை செனுவியத்தை நில. பரப்பு 8ம் செய்பயிர் வர பயிர்களும் அதுள் உரைத்தா இ. செ. லோதன்ஸ்பிக்டென் 23-5-1978ம் திகதியிட்ட 1885-ம் இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட படத்தின் டி. நில பரப்பு 7 குளி 5·5ம் எல்லை கிழக்கு கந்தையாபெண் தம்பமணிக்குரிய ஆதனம், வடக்கு ஞானப்பிரகாசம் பெண் இராசமணிக்கும் பலருக்குமுரிய ஆதனம், மேற்கு தெயில்ரோட்டு. இக்காணிக்கு வரும் பாதையும், தெற்கு திருபரராசமகள் தேசமலருக்குரிய ஆதனம் இவ் வெல்லைப்படி இடங்கலும்.

மு. நல்லலிங்கம்,
பிஸ்கால் மாவட்ட நீதிமன்றம்,
மல்லாகம்.

6467

**ராஜம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-45
சிவாஜி - மாலினி
**பைலட் பிரேம்நாத்**
(புதிய பிரதி)

**வெஸ்லி** (சாவகச்சேரி)
தினசரி 6-30, 9-30
ராஜன்- கே.ஆர். விஜயா
**தெய்வம்**
(கலர்)

**SRIDHAR** JAFFNA
Daily 5 Shows 10-30 am, 2-00, 4-30, 7-00 & 9-30 p m
More Terrifying than Exorcist
**Exorcist-11 The Heretic**
with
LINDA BLAIR, RICHARD BURTON, LOUISE FLETCHER
(Adults only)
பேய், பிசாசுகளைக் கிளையும் திகிலூட்டும் சம்பவங்களைச் சித்திரிக்கும் ஒரு பயங்கரச் சித்திரம்.
(வயதுவந்தவர்கட்கு மட்டுமே)
From 01-08-80 THE WILD GEESE

## சமாதானத்தின்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

திருவைத்துள்ள முத்திரைகள் தற்போது மாஸ்கோவில் நடைபெறும் முத்திரைக் கண்காட்சியில் பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

திரு சமாரான்ச் "முத்திரைகளில் ஒலிம்பிக் வரலாறு" என்ற மகுடத்தில் நாலு முத்திரைத் தொகுதிகளை கண்காட்சியில் வைத்துள்ளார். 1896ல் வெளியான மிக அபூர்வமான ஒலிம்பிக் முத்திரைகளையும் இவர் வைத்திருக்கிறார். (கு)

## பின்னறுதிக்கட்டளை

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

மரணசாதனம் அற்று இறந்த கரவெட்டி கிழக்கு சிவபாதம் ஜெகநாதனின் சொத்து விடயமாக

வில்லூர் திருநெல்வேலி கிழக்கு ஜெகநாதன் மனைவி தவமணிதேவி.

மனுதாரர்

இல. மரணசாதனம் 1087

எதிராக

1. கல்லூர் திருநெல்வேலி கிழக்கு ஜெகநாதன் மகள் இருஞ்சேவேணி பராயமற்றவர் தனது பாதுகாவலராக அவ்லூர்

2. நாகராசா வேலாயுதம்பிள்ளை.

எதிராளிகள்.

இவ் மூர்க்கு 1979ம் ஆண்டு கார்த்திகை மாதம் 20ம் திகதி பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற நீதிபதி திரு. சே. இராசநாதன் அவர்கள் முன்னிலையில் மனுதார் சார்பில் அவரின் சட்டத்தரணிகள் தர்மலிங்கமும் தில்லைநடேசனும் சமூகமளிக்க மனுதாரின் 19-11-1979 ம் திகதியிட்ட மனுவும் சத்தியக் கூற்றும் வாசிக்கப்பட்டு பின்வருமாறு கட்டளையிடப்பட்டது

இக்கட்டளைக்கு மாறுகாரணங்கள் எதுவும் 1980ம் ஆண்டு தை மாதம் 25 ந் திகதி அன்று அல்லது அதற்கு முன்பாக காட்டப்பட்டாலன்றி மேற்குறித்த மனுதார் குறித்த காலஞ்சென்ற சிவபாதம் ஜெகநாதனின் சொத்தை நிர்வகிப்பதற்கு தத்துவகாரராக இத்தால் நியமிக்கப்பட்டுள்ளார் அத்துடன் குறித்த பராயமற்ற 1ம் எதிர்வாதிக்கு வழக்கை நடத்துவதற்காக 2ம் எதிர்வாதியை பாதுகாவலராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

குறித்த எதிர்வாதிகள் இந்நீதிமன்றத்தில் 25-1-1980ம் திகதி அன்று சமூகமாயிருக்க வேண்டுமென்றும் கேட்கப்பட்டுள்ளார்.

எஸ். இராசநாதன்,
(ஒப்பம்)
மாவட்ட நீதிபதி,
பருத்தித்துறை மாவட்ட
நீதிமன்று.

(மேற்குறித்த திகதி 7-3-80க்கு நீடிக்கப்பட்டது.
ஒப்பம்)

எஸ் இராசநாதன்,
நீதிபதி,

தயாரித்தவர்:
தர்மலிங்கமும்,
தில்லைநடேசனும்,
(ஒப்பம்
மனுதாரின் சட்டத்தரணிகள்

7-3-80 முன்குறித்த திகதி 16-5-80க்கு நீடிக்கப்பட்டது.

எஸ் இராசநாதன்,
(ஒப்பம்)
மாவட்ட நீதிபதி

16-5-80 முன்குறித்த திகதி 1-8-80க்கு நீடிக்கப்பட்டுள்ளது.

எஸ். இராசநாதன்,
ஒப்பம்
மாவட்டநீதிபதி.

6393

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுக்கல்வித் தராதரப் பத்திரப் பரீட்சை
G C E O/L 1980
தமிழ் மொழி
பகுதி I பகுதி II
புதுமுறை மாதிரிகைப் பயிற்சி வினாக்கள்
நடைமுறையில் உள்ள புதிய பாடத்திட்டத்திற்கு அமைவானது.
ஆக்கம்: வித்துவான் க. சொக்கலிங்கம் (சொக்கன்) M A.
விலை: 7-75
காந்தளகம்
213, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம்.


ஈழநாடு The EELANAADU 50 சதம்

## படகுவிபத்தில் சிக்கிய 10பேர் உயிர்பிழைத்தனர்

(வேலணை)

படகு விபத்தில் கடலில் மூழ்கிய 10 பிரயாணிகள் தெய்வாதீனமாக காப்பாற்றப்பட்டனர்.

புங்குடுதீவு குறிகாட்டுவான் துறைமுகத்திலிருந்து 45 மாடுகளையும் 10 பிரயாணிகளையும் ஏற்றிக்கொண்டு நயினாதீவுக்குச் சென்ற "செல் அன்ரனி" என்ற படகு கடலில் மூழ்கியது இச்சம்பவம் சில தினங்களின் முன் இடம்பெற்றது.


துலக்கமான
போட்டோ ஸ்ரட் பிரதிகளுக்கும்,
புகைப்பட சாதனங்களுக்கும்
பாரத் சென்ரர்
178, நவீன சந்தை, (நவீனசந்தை உட்புறம்)
யாழ்ப்பாணம்
போன்: 8265


### ரியூட்டரி மாணவி கமலம் கொலை வழக்கு:

# "பொலிசாருக்கு காப்பை கொடுக்கமுதல் மறுத்தேன்"

## பரமேஸ்வரி சாட்சியம்

(புலோலி)

வீட்டிற்கு வந்த பொலிசாரும் பத்தரும் காப்பைத்தருமாறு கேட்டபோது நான் மறுத்ததற்கிணங்க பத்தர் இந்தக்காப்பு ஒரு கொலை வழக்கு சம்பந்தப்பட்டது. இக்காப்பை ஒரு பெண் என்னிடம் கொண்டுவந்து விற்றிருந்தார். இக்காப்பு கொலைவழக்கு ஒன்றில் சம்பந்தப்பட்டது. என எனக்கு இப்போதான் தெரியும். இதனால் இக்காப்பை இப்போ பொலிசாருக்குக் கொடுக்க வேண்டும் என்று கூறியதற்கிணங்க நான் பத்தரிடம் காப்பைக் கொடுத்தேன். பத்தர் என்னிடம் வேறொரு சோடிகாப்பும் 400 ரூபா பணமும் தந்தார்.

இவ்வாறு பொலிகண்டி டியூட்டறி மாணவி கமலம் இராமச்சந்திரன் (15 வயது) கொலைவழக்கு விசாரணையில் சாட்சியமளித்த இராமநாதபுரத்தைச் சேர்ந்த தேவராசா பரமேஸ்வரி (வயது 25) கூறினார்.

தொடர்ந்து சாட்சியமளித்த இராமநாதபுரம் பரமேஸ்வரி குறிப்பிட்டதாவது

எனக்கு கனகசபாபதிப் பத்தரை 7, 8 வருடங்களாகத் தெரியும் 14-3-80 -ம் திகதி எனக்கு ஞாபகமாக இருக்கின்றது அன்றிரவு சுமார் 8-30 மணிபோல் பொலிசாரும் கனகசபாபதிப்பத்தரும் எங்கள் வீட்டிற்கு வந்தார்கள்.

### காப்பை கேட்டார்கள்

வந்தவர்கள் அம்மா கொண்டுவந்த காப்பைத் தருமாறு கேட்டார்கள் நான் செய்துக் கொடுத்த காப்பிற்கு பதில் காப்புத் தானே அது. அத்துடன் ஐயா அம்மா ஒருவரும் இல்லாத படியால் காப்பைத்தரமாட்டேன் என்று சொன்னேன்.

அதற்கு பத்தர் இந்தக் காப்பு ஒரு கொலை வழக்கு சம்பந்தப்பட்ட காப்பு என்பது எனக்கு முன்பு தெரியாது இப்போது தான் தெரியும் எனவே இப்போ காப்பைப் பொலிசாருக்கு கொடுக்க வேண்டும் எனவே காப்பைத்தரவும் என்று என்னைக் கேட்டார்.

### காப்பை கொடுத்தேன்

அத்துடன் அந்தக் காப்பிற்கு பதிலாக வேறு 1 சோடி காப்பும் காசு 400 ரூபாவும் தருவதாகவும் பத்தர் சொன்னார். எனவே நான் என்னிடமிருந்த 1 சோடி காப்பையும் பத்தரிடம் கொடுத்தேன்

மன்றில் சாட்சிக்கு காப்பு காட்டப்படுகிறது. இது எனது சொந்தக்காப்பாக இல்லாத படியால் சரியாகச் சொல்லமுடியாதென்றாலும் கொம்பே டிசைன் காப்புத்தான் பத்தர் கைமாற்றாகத் தந்த தென்றபடியாலும் இதுவும் கொம்பே டிசைன் காப்பாக இருப்பதனாலும் இதுதான் அந்தக்காப்பு என நான் அடையாளம் காட்டக் கூடியதாகவுள்ளது.

இந்தக்காப்பு நான் புதியகாப்பு செய்வதற்காக பத்தரிடம் கொடுத்த காப்பிற்கு பதிலாக எங்களுக்குத் தரப்பட்ட காப்பாகும் இதை பத்தர் புதிய காப்புத்தரும் வரைக்கும் எங்களை உபயோகிக்கும் படி எங்களுக்கு கூறியிருந்தார்.

1-ம் எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம் சாட்சியை குறுக்கு விசாரணை செய்தார்.

சட்! அந்தக் காப்பை எத்தனை நாட்கள் நீங்கள் வைத்திருந்தீர்கள்? - 3 கிழமை வரை

சட்: அந்தக்காப்பை கொஞ்சக்காலம் தான் நீங்கள் வைத்திருந்த படியாலும் அது உங்களுக்குச் சொந்தமான காப்பாக இல்லாதிருந்தபடியாலும் இதுதான் அந்தக் காப்பென முடிவாகச் சொல்ல முடியாதுள்ளது அந்தக் காப்புத்தான் என அடையாளம் காட்டுவதற்கு காரணமாக இருப்பது முன்பு பத்தர் தந்த காப்பும் கொம்பே டிசைன் இந்தக்காப்பும் கொம்பே டிசைன்.

மேல்விசாரணை இம் மாதம் 31-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (கு)

### கல்வி அமைச்சு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பேற்று இருக்கும் திரு. மாணிக்கவாசகர் வடமாநில வித்தியாதிபதியாகப் பணியாற்றிய போது தன்னுடன் ஒத்துழைத்த ஆசிரியர்கள் ஊழியர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துள்ளார். (இல-கு)

## சுருக்கிட்டநிலையில்கிணற்றுள் பிணமாகக் கிடந்தார்

(யாழ்ப்பாணம்)

மூன்றுபிள்ளைகளின் தந்தை ஒருவர் கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் கிணறொன்றிலிருந்து பிணமாகக் காணப்பட்டார்.

இப்பரிதாப சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை யாழ். ஸ்ரான்லி வீதியிலுள்ள கடை ஒன்றிற்குப் பின்னாலுள்ள கிணற்றில் இடம்பெற்றது.

மரணமான சுந்தரம் பொன்னுத்துரையின் (31 வயது) மரண விசாரணை ஸ்தலத்தில் நடைபெற்றது. மரணவிசாரணையின்போது மரணமானவரின் மனைவி பொன்னுத்துரை மஞ்சுளா சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

"கல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட நாங்கள் தொழில்முறைகாரணமாக முத்திரைச் சந்தையில் வாழ்கிறோம். அங்கு ஒரு புதிய வீடு கட்டுகிறோம். எனது கணவருக்குத் தொழிலில் நஷ்டம் ஏற்பட்டதனால் கஷ்டம் ஏற்பட்டது. அதனால் ஏற்பட்ட கவலையை மறப்பதற்காக தினமும் நண்பர்களுடன் சேர்ந்து மது அருந்துவார்.

தினமும் மதுபோதையில் வீட்டிற்குவரும் எனது கணவர் தற்கொலை செய்யப் போவதாகப் பல முறை கூறினார். சில சமயங்களில் நித்திரைக் குளிசைகளைச் சாப்பிட்டுமிருக்கிறார். அப்படியிருந்தும் காப்பாற்றப்பட்டுவிட்டார்.

சம்பவதினம் இரவு பதினொரு மணியளவில் மதுபோதையில் வீட்டிற்கு வந்தவர் வீட்டிற்குள் இருந்த சூட்கேசை எடுத்து அதிலிருந்த முந்நூறு ரூபாவில் இருநூறு ரூபாவை என்னிடம் தந்து விட்டு நூறுரூபாவை எடுத்து தனது சட்டைப்பைக்குள் வைத்துக்கொண்டார். பின் என்னை அறைக்குள் சென்று படுக்கும்படி கூறிவிட்டு தனது பாய்பேட்டை எடுத்துத் தூள் தூளாகக் கிழித்தெறிந்து விட்டு இரவு 2 மணியளவில் வெளியே போனார். அவர் புதிதாகக் கட்டப்படும் வீட்டிற்குப் படுக்கப்போவதாக எண்ணிக்கொண்டு நான் படுத்துவிட்டேன்.

ஸ்ரான்லி வீதியில் கராச் வைத்திருக்கும் கிளி என்பவர் மறுதினம் காலை 7 மணியளவில் எங்கள் வீட்டிற்கு வந்து எனது கணவர் சுருக்கிட்டு இறந்து விட்டதாகக் கூறினார், அவர்களுடன் சேர்ந்து அவ்விடத்திற்குச் சென்று பார்த்தபோது கிணற்று வாளிக் கயிற்றைக் கழுத்தில் கட்டியபடி கணவர் கிணற்றுக்குள் இறந்த நிலையில் காணப்பட்டார். அவருக்கு எதிரிகள் இல்லை. அவர் என்னுடனும் அன்பாகவே வாழ்ந்தவர். அவர் தானே சுருக்கிட்டுத் தற்கொலை செய்திருக்கலாம்.

உத்தியோகப்பற்றற்ற நீதிபதியும் மரண விசாரணை அதிகாரியுமான திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு தீர்ப்பு வழங்குவதை ஒத்திவைத்தார்.

யாழ். பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிள்கள் திரு. இராமலிங்கம், எட்மன் ஆகியோர் சாட்சிகளை ஆஜர்செய்தனர். (கொ-உ)

### மோட்டார்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆளை (மனோகரனை) மோட்டார் சைக்கிளில் ஏற்றி பொலிசிற்கு கொண்டு போகும் போது எங்களை மோட்டார் சைக்கிளை ஓடவிடாமல் மறிக்கவோ, இறங்கி ஓடவோ முற்படவில்லை.

நான் அந்த ஆளை மோட்டார் சைக்கிளில் ஏற்றும் போது அவ்விடத்தில் நின்ற ஆட்கள் கதைத்ததிலிருந்து பட்டது எனக்குத் தெரிந்தது. 2-ம் எதிரியுடன் தான் ஆரோ பிரச்சினை என எனக்கு விளங்கியது. இதனால் தான் அவரை (மனோகரனை) ஏற்றிக்கொண்டு போய் பொலிசில் விட்டேன்.

முனியைச் சேர்ந்த சிவலிங்கம் என்பவரும் கறுத்த மோட்டார் சைக்கிள் ஒன்றில் பொலிசிற்கு வந்தார்.

நான் மோட்டார் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு போய் பருத்தித்துறைப் பொலிசில் இறக்கிவிட்டவரை எனக்குத் தெரியாது அவரைக் கண்டால் என்னால் அடையாளம் காட்ட முடியும்"

மேல்விசாரணை இம் மாதம் 31 ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (•)

### இயக்குநர்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

வெற்றி வெற்றவர்கள் குழுவிலிருந்த ஆதரவாளர்களால் மாலைசூட்டி ஊர்வலமாகத் தூக்கிச் செல்லப்பட்டனர்.

இதற்கு முன்பு நடைபெற்ற இக்குழு தேர்தலிலும் ஒன்பது இடங்களையும் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் கைப்பற்றினர்.

## தற்கொலை

(மாவிட்டபுரம்)

சமையல் பிந்தியதால் கணவன் மனைவிக்கிடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக கணவன் நஞ்சருந்தித் தற்கொலை செய்துகொண்டார்.

அளவெட்டி வடக்கைச் சேர்ந்த தவசி கதிரவேலு (55 வயது) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு ந. தம்பிராசா இம்மரணம் குறித்து விசாரணை நடத்தியபோது காலமானவர் மதுவருந்தும் பழக்கமுடையவரெனவும், சம்பவதினம் காலையில் வேலைக்குப்போய்விட்டு மதியம் வீடுதிரும்பியபோது மனைவி சமையல் முடித்திருக்கவில்லையென்றும், இதனால் மனைவிக்கும் அவருக்குமிடையில் தகராறு ஏற்படவே அவர் நஞ்சருந்தியதாகவும் தெரியவந்தது.


மக்கினொன் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்டெட்

உங்களை

திருச்சிராப்பள்ளி, மதுரை, பம்பாய், கோலாலம்பூர், சிங்கப்பூர், பரீஸ், லண்டன், துபாய், சவூதிஅரேபியா, கனடா ஆகிய நாடுகளுக்கு அழைத்துச் செல்ல

மற்றும்

பாஸ்போட், அமெரிக்கன் டிறவலர்ஸ் செக், உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட், கற்றுலாக்கள் ஆகிய உங்கள் தேவைகளை

கொழும்பு செல்லாமலே யாழ்ப்பாணத்தில் ஒழுங்கு செய்துகொள்ள

இன்றே தொடர்புகொள்ளுங்கள்

மக்கினொன் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்.

தபால் பெட்டி இல. 92

8. பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 8154

பயணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது!!


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ... யாழ்ப்பாணம் ... ஜூலை 23-ந் திகதி ... வெளியிடப்பட்டது. Registered as a News paper at the General Post office Sri Lanka under No. QD/3848/ 76, The Eelanaadu Post Box No. 49, Telegram "Eelanaadu, Phone 289